بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை)

அவர்களின் உண்மைத் தன்மைக்கு

# நபிமொழி சான்றுகள்

வெளியீடு : ஜமாத் உல் ஸஹீஹ் அல் இஸ்லாம்

சான்று 1: நான்  ஆரம்பத்திலும் இறுதியில் இப்னு மர்யமும் இருக்கும் போது என்னுடைய உம்மத் எவ்வாறு அழிந்து போகும்? (இப்னு மாஜா)

இப்னு மர்யம் இறுதி காலத்தில் தோன்றுவதாக மேலே உள்ள ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி காலத்தின் சீர்திருத்தவாதி இப்னு மர்யம் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

எனக்கு பின் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மஸீஹ்மார்கள் வருவார்கள். எனவே இனி வரும் நூற்றாண்டுகளில் வரவிருக்கும் ஒவ்வொரு மஸீஹிற்கும் இந்த நபிமொழி சிறந்த சான்றாக விளங்குகிறது. (இஸாலே அவ்ஹாம் பக்கம் - 197)

வாக்களிக்கப்பட்ட மஸீஹைத் தொடர்ந்து வரவிருக்கும் 10000 த்திற்கும் மேற்பட்ட மஸீஹ்மார்களில் அன்னார் முதன்மையானவர் ஆவார். அல்லாஹ் அன்னாருக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பதவி உட்பட 10 ஆன்மீக பதவிகள் வழங்கி இருக்கின்றான்; அப்பதவிகள் யாவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய ஆன்மீக பதவிகள் வருமாறு:

1.அமீருல் முஃமினீன் - 19 ஜனவரி 2003
2. ஹஸ்ரத் - 25 ஜுலை 2003.
3. முஹையுத்தீன் - 06,07 டிசம்பர் 2004.
4. முஸ்லிஹ் மவ்வூத் - 20 பிப்ரவரி2004.
5. கலீஃபதுல்லாஹ் - 26,27 மே 2008.
6. இமாமே இன்குலாப் - 26,27 மே 2008.
7. மஸீஹ் மவ்வூத் - 10 செப்டம்பர் 2010.
8. முஜத்தித் செப்டம்பர் 2010.
9. ரஸூலுல்லாஹ் - அக்டோபர் 2010.
10. நபியுல்லாஹ் - அக்டோபர் 2010.

நபிகள் நாயகம்(ஸல்) ஆரம்பத்திலும் இப்னு மர்யம் இறுதியிலும் இருக்கும் இந்த சமுதாயம் எவ்வாறு அழிந்துபோகும்?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த பொன்மொழியனது இறுதி நாள் வரை நிலை நிற்கக்கூடியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் கோமான் நபி(ஸல்) அவர்களின் ஒவ்வொரு வார்த்தையும் இறுதி நாள் வரை நிலை நிற்கக் கூடியதும், எவ்வித மாற்றத்திற்கு உட்படாததுமாகும். ஆகவே இறுதி நாள் வருவதற்கு முன்பாகவே ஒரு மஸீஹ் நிச்சயமாக இருக்க வேண்டும். என்றால் மட்டுமே இந்நபிமொழி எக்காலமும். நிலைநிற்கக்கூடியதாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களின் கூற்றுப்படி இறுதி நாள் வரையிலும் வரவிருக்கும் மஸீஹ்மார்களில் அன்னார் முதன்மையானவர் ஆவார்கள். இது அன்னாருக்கு கிடைத்த இறை செய்தியின் வாயிலாக தெளிவு படுத்துகிறார்கள். சுருங்கக்கூறின்., கோமான் நபி (ஸல்) அவர்களின் இக்கூற்றானது இறுதி நாள் வரை நிலைநிர்ப்பதும், இந்நூற்றிண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்கான நபிமொழிச் சான்றுமாகும். அது மட்டுமின்றி இனிவரும் நூற்றாண்டுகளில் வரவிருக்கும் மஸீஹ் மார்களுக்கும் இது சான்றாக அமையும். ஆகையால் அனைத்து அமைப்பையும் சார்ந்த இஸ்லாமிய சகோதரர்களே நீங்கள் சிந்தியுங்கள் உங்களுக்கு விஷயங்கள் விளங்கும். எனவே இந்நூற்றாண்டின், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸிம் (அலை) என்பதற்கு இந்த நபிமொழியை முதல் ஆதாரமாக உங்கள் சிந்தனைக்கு விருந்தாக சமர்ப்பிக்கின்றோம்.

நபிமொழி ஆதாரம்: 2

ஈஸா நபி (அலை) அவர்கள் வரும்பொழுது அல்லாஹ் அன்னாருக்கு இறை வெளிப்பாடு (வஹி) வழங்குவான். (முஸ்லிம், திர்மிதி)

இங்கு குறிப்பிட்டிருக்கும் ஹதீஸில் ஈஸா (அலை) வரும்பொழுது அவருக்கு வஹி அறிவிக்கப்படும் என்ற நபிமொழி வார்த்தைகள் கவனிக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த நபிமொழிக் கூற்றின்படி அல்லாஹ் அன்னாருக்கு வஹி இறக்கிக் கொண்டிருக்கின்றான். கி.பி 2000 மாவது ஆண்டு முதல் அல்லாஹ் அன்னாருக்கு வஹி வழங்குகின்றான். 2020 லும் அது தொடர்ந்து இறங்கிக் கொண்டிருக்கின்றது. நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மர்யமின் மகன் ஈஸாவிற்கு வஹி வழங்கப்படும் என அருளிய அந்நபிமொழி கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் அல்லாஹ் அன்னாருக்கு வஹி வழங்கிக் கொண்டிருக் கின்றான். அவ்வாறே வரவிருக்கும் நூற்றாண்டின் மஸீஹ்மார்களுக்கும் வஹி வழங்கப்படும் என்பதற்கு இந்நபிமொழி சாட்சியாக இருக்கின்றது. இது இறுதிநாள் வரை நிலை நிற்பதுமாகும். இது ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்களின் உண்மைத்தன்மைக்கு இரண்டாவது சான்றாக உங்கள் மதிக்கு மாமருந்தாக இந்நபி மொழியை உங்கள் மத்தியில் வைக்கின்றோம்.

நபிமொழி ஆதாரம்: 3.

அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு இருக்கும் ஒரு தருணத்தில், திருமறையின் அதிகாரம் ஜுமுஆவில், "வ ஆகரீனம் மின்ஹும் லம்மா யல் ஹக்குபிஹிம்" என்ற வசனம் இறங்கியது. அப்போது நான் அன்னரிடம் யா ரசூலுல்லாஹ் அது எந்த கூட்டம் என்று வினவினேன், அவ்வாறு மூன்று தடவை கேட்டபோதும் அன்னார் பதில் ஏதும் அளிக்கவில்லை. அப்போது எங்களோடு சல்மானுல் ஃபாரிசி (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அன்னாரின் தோள்மீது நபியவர்கள் கை வைத்து கூறினார்கள், ஈமான் எனும் நம்பிக்கை கார்த்திகை நட்சத்திரம் வரை சென்றடைந்தாலும் அதை மீண்டும் திரும்ப கொண்டு வருவதற்கு இவருடைய சந்ததிகளில் ஒருவர் அல்லது பலர் வருவார்கள். (புகாரி கிதாபுல் தஃப்சீர்).

ஹதீஸில் கூறப்பட்ட பார்சி வம்சத்தில்படும் சல்மானுல் ஃபாரிசியின் பரம் பரையில் வந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை), ஹஸ்ரத் முனீர் (அலை) அவர்களின் ஆன்மீக தந்தையாவார். அக்காரணத்தால் அன்னாரும் (முனீர் அலை) அவர்களும் அந்த ஆன்மீக உட்பட்டவராகின்றார். அதன்படி ஹஸ்ரத் முனீர் அஹ்ம

அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் ஆன்மீக புதல்வனுமாவார்கள். ஆன்மீக தந்தையை பின்பற்றி வந்த அன்னாரை ஹஸ்ரத் மூனீர் அஹமது (அலை) அவர்களை அல்லாஹ், இந்நூற்றாண்டின் வாகளிக்கபட்ட மஸீஹாக தேர்வு செய்துள்ளான். இந்த நபிமொழி இறுதிநாள்வரை நிலை நிற்கக்கூடியதுதே! அதன்படி அன்னாரின் ஆன்மீக மைந்தர்கள் (ரிஜால்) என்ற வார்த்தையை நிரூபித்துக்கொண்டு அன்னார் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இந்நூற்றாண்டில் வருகை தந்துள்ளார்கள் என்பதற்கு இந்நபிமொழி சான்று பகர்கின்றது. இந்நபிமொழி, இறுதி நாள் வரை வரவிருக்கும் மஸீஹ்மார்களின், உண்மைக்கு ஆதாரமாக விளங்குகின்றது. எனவே இந்நபிமொழியை இந்நூற்றாண்டில் அவதரித்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்கு மூன்றாவது 'சான்றாக' உங்களின் அறிவின் அகப்பார்வைக்கு வழங்குகின்றோம்.

நபிமொழி ஆதாரம்: 4

ஆரம்பத்தில் அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம்( ஸல்) அவர்களும் இறுதியில் மர்யமின் மகனும் ஆவார்கள். இச்சமுதாயத்தின் துவக்கமும், இறுதியும் சிறப்பு வாய்ந்ததாகும். (கன்ஸுல்-உம்மால் பாகம் 6 பக்கம் 132)

ஆரம்ப கட்டத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இறுதி காலகட்டத்தில் மர்யமின் மகன் ஈஸா(அலை) அவர்களுமாயிருப்பார்கள் என இந்நபிமொழி உரைகின்றது. அதுபோல் முதலும், இறுதியும் சிறப்பான காலம் என்றும் கூறப்பட்டி ருக்கின்றது. அவ்வாறு சிறந்த காரணமாக கூறப்பட்டிருப்பது, ஆரம்ப கட்டத்தில் நபி (ஸல்) இருப்பதாலும்; அது போலவே இறுதி காலகட்டம் சிறப்புற காரணமாக இருப்பவர் மர்யமின் மகன் ஈஸா(அலை) அவர்களால் ஆகும். என்று இந்த நபிமொழியை உறுதிப்படுத்துகிறது. அன்னார், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு பின் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வருபவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இருப்பார்கள் எனக் கூறியதும் அங்ஙனம் ஒவ்வொரு நூற்றாண்டிலும், அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன வாக்களிக்கபட்ட மஸீஹ்மார்கள் வருவதினால்தான் இந்த சமுதாயத்தின் இறுதி காலகட்டம் சிறப்பானதாக இருக்கும் என்று பெருமானார் (ஸல்) இந்த நபிமொழி மூலம் உறுதிப்படுத்தியிரூக்கிறார்கள். எனவேதான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை)அவர்களுக்கு பின் அடுத்த நூற்றாண்டில் வருகை தந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸிம் (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்பதற்கு இந்நபிமொழி சாட்சி பகர்கின்றது. அதுபோன்று வரும் நூற்றாண்டுகளில் வரவிருக்கும் இறை பிரதிநிதிகள், வாக்க

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்மார்களாக இருப்பார்கள். என்றால் மட்டுமே இந்நபிமொழி பொருளுடையதாகும். காரணம் இறுதி காலத்தில் மஸீஹ் வருவார் என்று நபிகள் நாயகம் இந்நபி மொழியின் மூலமாக விளக்கியிருகின்றார். கடந்த நூற்றாண்டுகளிலும் இறை பிரதிநிதிகள் தோன்றினார்கள் அல்லவா? இது இறைவனின் சுன்னத் நடைமுறையாகும். அது தொடர்ந்து நடை பெறும்; ஆகையால் ஹஸ்ராத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களுக்கு பின்னர் வருகின்ற இறை பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற பதவி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையால் இந்நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் முனீர் அஹ்மது (அலை) அவர்களின் வருகையின் உண்மைக்கு 4-வது சான்றாக இந்நபி மொழியை சிந்தனை செய்யும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களின் உள்ளங்களை தூண்ட அன்போடு சமர்பிக்கின்றோம்.

நபிமொழி ஆதாரம் 5.

எனது சமுதாயத்தின் உதாரணம் மழையின் உதாரணத்திற்கு ஒப்பானதாகும். அதன் ஆரம்பமும், இறுதியும் சிறப்பு டையதாகும். (திர்மிதீ.)

எனது சமுதாயத்தின் நிலை மழையை போன்றதாகும். துவக்கத்தில் அன்னாரின் சமுதாயத்திற்கு, நபிகள் (ஸல்) அவர்களுக்கு மழை பொழிவது போல் அல்லாஹ்விடமிருந்து வெளிப்பாடு கிடைத்துக் கொண்டிருந்தது; அதுபோல் வெளிப்பாடுகளுடன் இறுதியில் மஸீஹும் இருப்பார் .14-ம் நூற்றாண்டிலிருந்து இறுதிநாள் (கியாமத்) வரை மஸீஹ்மார்களின் தொடர் வருகை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் மூலம் தொடரும். எனவேதான் பெருமானார் (ஸல்) என்னுடைய சமுதாயம் மழைக்கு ஒப்பானதாகும், என உதாரணத்தின் மூலம் உவமைப் படுத்தினார்கள். இதோ நமது காலகட்டத்தில் ஹஸ்ரத் முனீர் அஹமது (அ) மழை பொழிவது போல் இறை செய்திகளை பெற்றுக்கொண்டு நம்முன்னால் நிற்கிறார்கள். இனி வரும் நூற்றாண்டுகளிலும், வரும் மஸீஹ் மார்கள் இறைவனிடமிருந்து மழை பொழிவது போல் வஹி/வெளிப்பாடு களுடன் வந்து கொண்டிருப்பர். அதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சமுதாயத்தை மழையோடு ஒப்பிட்டார்கள். மழை பூமிக்கு அருளாக இருப்பது போல், வெளிப்பாடுகள் மனிதனுக்கு அருளாக இருக்கின்றது. அது அன்னாரின் சமுதாயத்தில் இறுதிநாள் வரை தொடர்ந்து கொண்டிருக்கும் என்ற உண்மை யின் பக்கம் இந்நபிமொழி நம்மை இட்டுச் செல்கின்றது. அதனால்தான் மழைபோல் பொழியும் இறை வெளிப்பாடுகளுடன் பதினைந்தாம் நூற்றாண் டின் மஸீஹ் நம்முன்னால் இருக்கிறார்கள். அதன் ஆதாரமாக இந்நபி மொழியை ஐந்தாவது சான்றாக வைக்கின்றோம்.

நபிமொழி ஆதாரம் 6.

இறுதி கட்டத்தில் ஒரு கூட்டம் வரும் அவர்கள் ஆரம்ப கால மக்கள் அருட்களைப் பெற்றது போலவே அருளைப் பெறுவார்கள். இவர்கள் நன்மையை ஏவி, தீமையை தடுப்பவர்களும், அக்கிரமகாரர்களுக்கு எதிராக போராடவும் செய்வர். (மிஷ்காத்:பாகம் 584)

ஆரம்ப காலத்தில் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு மக்கள் கூட்டம் இருந்தனர் அவர்கள் நன்மையை போதிப்பவர்களுமாக, தீமையை தடுப்பவர்களுமாக இருந்தனர். அதற்கு அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரும் இருந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தொடர்ந்து 12 கலீஃபாமார்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. அவர்கள் யாவரும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவர்ளாக இருந்தனர். இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹை குறித்தும் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு சீர்திருத்தவாதி தோன்றுவார் என ஒரு நபிமொழி கூறுகின்றது. இந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாக்குறுதிகள் யாவற்றையும் உண்மைப்படுத்தும் வகையில் அல்லாஹ்விடமிருந்து அவனது வரும் பிரதிநிதியாக ஒருவர் வரும்போது; அவரை எதிர்த்து அன்னாரின் பணியை தடை செய்ய எண்ணுகின்றனர்.

நபிமொழியில் கூறப்பட்டது போன்று இறுதி காலத்தில் ஒரு கூட்டம் வரும் அவர்கள் நன்மையை போதிப்பவர்களும், தீமையை தடுப்பவர்களும், குழப்பகாரர்களுக்கு எதிராக போராடுபவர்களும் ஆவர். இக்கூட்டத்திற்கு ஒரு தலைவர் வேண்டாமா? அத்தகைய கூட்டத்தின் தலைவர் இறைவனால் அனுப்பப்பட்டவராவார். இது பரிசுத்த குர்ஆனிலும், நபிமொழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளாகும்.

இறைவனின் பிரதிநிதியை வேண்டாம் எனக்கூறிய முஸ்லிம்கள் இன்று எத்தனை பிரிவுகளாக பிரிந்துள்ளனர்? அதனுடைய தலைவர்களையும், அமைப்புகளையும் நாமே உருவாக்கினோம். அல்லாஹ் அவனது நியதியின்படி அவனது இயக்கத்தையும் உருவாக்கினான். நபிமொழியில் கூறப்பட்டது போன்று, இறைவனால் அனுப்பப்படுகின்ற இறை அடியாரின் பின்னால் அணிவகுத்து நன்மையை போதிப்பவர்களும், தீமையை தடுப்பவர்களும், அக்கிரமக்காரர்களுக்கு எதிராக போராடுபவர்களும் ஆவர் என்று ஹதீஸ்கள் நம்மை கற்பிக்கின்றது. இதோ ஹஸ்ரத் முனீர் அஹமது (அலை) அவர்களை பதினைந்தாம் நூற்றாண்டின் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அல்லாஹ் நியமித்துள்ளான். ஆரம்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இணைந்து

ஒரு கூட்டம் நன்மையை போதித்தும், தீமையை தடுத்தும் அக்கிரமத்திற்கு எதிராக போராடியதைப் போன்று இதோ இப்போது இக்காலத்திலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹோடு இணைந்து ஒரு ஜமாஅத் மக்கள் நன்மையை போதித்தும், தீமையைத் தடுதும், அதர்மங்களுக்கு எதிராக போராடவும் செய்கின்ற ஒரு கூட்டம் உங்களில் உருவாகும் என்ற நாயகம்(ஸல்) அவர்களின் பொன்மொழியை நிரூபித்துக்கொண்டு ஒரு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நம் முன்னால் நிற்கிறார். இப்பொன்மொழியாம் நபிமொழியை, உங்கள் உள்ளத்தில் கேள்விக் கணைகளைத் தொடுக்கம் விதம் அன்னாரின் வருகைக்கான ஆறாவது சான்றாக இதோ உங்கள் பார்வையில்...

நபிமொழி ஆதாரம் 7.

மதம் சார்ந்த பிழைகளை நீக்கி சீர்திருத்தி, அவர்களுக்கு ஒரு புது வாழ்வை, வழங்குவதற்காக அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டிலும் அவனது பிரதி நிதியை நியமிக்கின்றான்.(அபூதாவூத்)

இந்த ஹதீஸ் எக்காலமும் நிலை நிற்க வேண்டுமல்லவா? அல்லது இந்த ஹதீஸை ரத்து செய்து விட்டீர்களா இந்ந பிமொழியின்படி அல்லாஹ் அவனுடைய இறைஅடியார்களை அனுப்பினான் அல்லவா? கடந்த 14-ம் நூற்றாண்டுகளிலும் இறையடியார்கள் தோன்றினார்க ளல்லவா? அது 15-ம் நூற்றாண்டிலும் சாத்தியமாக வேண்டாமா? இறுதிநாள் வரை இந்நபிமொழி உயிரோடு இருக்க வேண்டாமா? இந்நபிமொழிக்கு பதினைந்தாம் நூற்றாண்டில் உயிர் கொடுத்தவரே ஹஸ்ரத் முனீர் அஹமது (அலை) அவர்கள் ஆவார்கள் இத்தனை ஆதாரங்களும், சாட்சியங்களும் நம் முன்னால் இருந்தும் எதற்கு இந்த விதண்டாவாதமும், நொண்டி சாக்கும். யாருக்காக? நம்மை படைத்த இறைவனுக்காகவா? அல்லது எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவா? அதுமட்டுமல்ல ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களுக்காகவா அல்லது நாம் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் நமது அமைப்புகளின் தலைவர்களுக்கு சமாதானம் செய்யவா? பயபக்தியுடைய இறை நம்பிக்கையாளர்ககளே சிந்தித்துப் பாருங்கள்! பிறகு தீர்மானித்துக் கொள்ளுங்கள், நம் கரங்களால் தேர்ந்தெடுத்த தலைவர்களுக்கு ஸலாம் போட வேண்டுமா? அல்லது அனைத்துலக இரட்சகனாம் அல்லாஹ், பதினைந்தாம் நூற்றாண்டில் அல்லாஹ் வழங்கிய ஹஸ்ரத் முனீர் அஹ்மது (அலை) எனும் நபர் நம்மை ஈடேற்றத்தின் பக்கம் அழைக்கும் இறை இராஜகுமாரனின் பக்கமா? ஈஸா என இந்த சமுதாயத்தின் இறுதி கட்டத்தில், ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பப்படும் இறைபிரதிநிதிகள், மர்யமுடய மகன் அதாவது வாக்

வாக்களிக்கப்பட்ட மஸீஹாயிருப்பார்கள் என்ற அறிவின் அடிப்படையிலும், ஆதாரத்தின் அடிப்படையிலும், நபி (ஸல்) அவர்களின் நபிமொழியின் அடிப்படையிலும், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களின் நூல்களின் அடிப்படையிலும் விளக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டையும் மெய்ப்படுத்திக்கொண்டு அல்லாஹ், அன்னாருக்கு 10 ஆன்மீக பதிவுகளை வழங்கி, பதினைந்தாம் நூற்றாண்டின் பிரதிநி தியாக, என்னை நியமித்துள்ளான் என அல்லாஹ்வை சாட்சி நிறுத்தி பாரெங்கும் பறைசாற்றிவருகிறார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இமாமுஸ் ஸமானின் தேவையை பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். ஒருவன் தன்னுடைய காலத்தின் இமாமை பற்றி தெரிந்து கொள்ளாத நிலையில் அல்லாஹ்வின் அருகில் வருபவன் குருடனாக இருப்பான் என்றும், அத்தகையவர்களுக்கு "ஜாஹிலிய்யத்தில் மரணம்தான்" ஏற்படும் என உறுதிபட கூறியுள்ளார்கள். இறைவனின் நின்றோ, அல்லாமலோ அறிவுரையோ, ஞானமோ, தரிசனங்களோ கிடைக்கக்கூடிய எவராகினும் இமாமுஸ் ஸமானின் கீழ் அணிவகுக்கவில்லை எனில் ஆபத்தான முடிவை சந்திக்க நேரிடும் என மிர்சா குலாம் அஹமது (அலை) அவர்கள் ஸரூரருதுல் இமாம் என்ற நூலில் குறிப் பிட்டுள்ளார்கள். கண்கள் நல்லவற்றை பார்ப்பதற்காக மட்டுமே. தீயதை ரசிப்பதற்கல்ல, நாவுகள் நல்லதை பேசுவதற்கு மட்டுமே பிறரை பழிப்பதற்கல்ல, காதுகள் நல்லதை கேட்பதற்காகும், பிறரின் துன்பங்களை கேட்கக் கூடியதாகட்டும், கரங்கள் பிறரை உதவுவதற்காக மட்டுமே; தாண்டிப்பதற்கல்ல, உள்ளம் உண்மையை ஏற்றுக் கொள்வதற்கும், அங்கீகரிப்பதற்குமாகும். வையகமே! உங்களுக்கு வழங்கப்பட்டயாவும் இறைவனின் அருட்கொடைகளாகும். நீங்கள் அவன் பக்கம் திரும்புங்கள் அவனின் தூதரின் பக்கம் திரும்புங்கள் நீங்கள் நேர்வழி பெறுவதற்கு. இந்த நூற்றாண்டின் இமாமுஸ்மான் (ஹஸ்ரத்முனீர் அஹமது அஸீம்) அவர்களிடம் பைஅத் செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கு, இறை ஞானிகளையும், அனைத்து இஸ்லாமிய அமைப்புகளையும் அன்போடு அழைக்கின்றோம். அதுமட்டுமின்றி உலகெங்கும் உள்ள அனைத்து மக்களையும் ஏக இறைவனாம் அல்லாஹ்வை மட்டும் வணங்குவதற்காக அழைப்பதோடு இந்நாற்றாண்டின் தர்மத்தை கற்பிக்கும் நபராக அன்னாரை ஏற்றுக் கொள்வதற்காகவும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

நேரத்தை கணக்கில் கொண்டு கோமான் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளை 7-ஆக சுருக்குகின்றோம். இங்கு கூறப்பட்ட மணிமகுடத்தின் பொன்மொழிகளை சொற்பொருளோடு விட்டுவிடாமல் அச்சொற்களின் அகம் சார்ந்த ஞானத்தை உங்கள் சிந்தனையால் செதுக்க நினைக்கும் பட்சத்தில்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹமது (அலை) அவர்களும் சான்று பகிர்ந்துள்ளார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இன்னார் (முனீர்) என்பதை உணரமுடியும். காரணம் காத்தமுன் நபியீன் முஹம்மது முஸ்தபா (ஸல்) , காத்தமுன் குலபா மிர்ஸா குலாம் அகமது (அலை) அவர்களும் கூறிய வார்த்தைகளுக்கு உயிர் கொடுத்துக் கொண்டு பதினைந்தாம் 12 ஆம் நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக முனீர் அவர்கள் அவதரிதுள்ளார்கள்.
உங்கள் மதியை, (அறிவை) ஆய்வுக்கூடத்தில் சற்று அமர்த்தி, நிறைந்த திறந்த உள்ளத்தோடு நீங்கள் இந்நபிமொழிகளை சிந்தனை செய்து பார்த்தால் நிச்சயமாக அல்லாஹ்வின் உதவியுடன் இந்நூற்றாண்டின் இமாமை ஏற்று ஈருலகிலும் வெற்றி பெறுவீர்கள். இன்ஷா அல்லாஹ்...

**Compiled By: Mukarram R. Jamaludin Raother**
**Amir - Jamaat Ul Sahih Al Islam**
**South Zone - Kerala, India**
**E-mail : jamal.raother@gmail.com**
**Web : www.jamaat-ul-sahih-al-islam.com**
**Blog : www.sahih-al-islam.blogspot.in**

## Translated By: Abdul Sudheer & Nadheera Sudheer

## Edited By: Jamaat Ul Sahih Al Islam, Tamilnadu

# அல் குர்ஆன் 16:37

ஒவ்வொரு சமூகத்திலும் திட்டமாக நாம் ஒரு தூதரை அனுப்பியிருக்கிறோம், (அத்தூதர் அச்சமூகத்தவரிடம்) அல்லாஹ்வையே வணங்குங்கள், (அல்லாஹ் அல்லாத வணங்கப்படும் அனைத்து ஷைத்தான்களாகிய) தாகூத்திலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் (என்று கூறினார்கள்.) ஆகவே, அவர்களில் அல்லாஹ் நேர்வழியில் செலுத்தியவர்களும் இருக்கிறார்கள், இன்னும் எவர்மீது வழிகேடு விதியாகிவிட்டதோ அவரும் அவர்களில் இருக்கிறார்கள், ஆகவே நீங்கள் பூமியில் சுற்றித்திரிந்து (அத்தூதர்களைப்) பொய்யாக்கியவர்களின் முடிவு எப்படி இருந்தது என்பதை) கவனித்துப் பாருங்கள்.